சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் -2024

சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது.

மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள 06 வீதிப் பிரிவுகளின் 131.5 கிலோமீற்றரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,628 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 81.75 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. ரூபா 2,828 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 யூன் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 05 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2027 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள்

எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்கீட்டு குறைபாடுகள்	தொகை ரூபா மில்லியன்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	கடன் மீது செலுத்தப்பட்ட திரண்ட வட்டியானது செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு	1,127.03	ரூபா 1,127.03 தொகையான கடன் கிரயங்களானது 2024.03.27 ஆம் திகதிய அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை இல	தொடர்புடைய தகவல்கள் திறைசேரியிடமிருந்து பெறப்பட

	செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, நிதிக் கூற்றுக்களில் உள்ள வெளிநாட்டு கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை என்பன அத் தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.		4/2024 இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படியே கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், இவ் விடயமானது 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இல 09 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	வேண்டியதுடன் வட்டி கட்டணங்கள் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்படலும் வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 05 இன் பந்தி 43(அ) வின் பிரகாரம், ஒவ்வொறு நிதிநிலமைக் கூற்றிற்குமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை நிதிநிலமைக்கூற்று திகதியில் உள்ள முடிவடையும் வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தில் மாற்றப்படல் வேண்டும். இருப்பினும், மேற்கூறிய தேவைப்பாடுகளின் படி நிதிநிலமைக்கூற்றில் செயற்திட்டத்தின் வெளிநாட்டு கடனுடன் தொடர்புபட்ட சமநிலைச் சீராக்கத்தினை செயற்திட்டமானது சீராக்கி அல்லது வெளிப்படுத்தி இருக்கவில்லை.	-	வெளிநாட்டு கடன் மீதான நாணயமாற்று விகித சமநிலைச்சீராக்கங்கள் 2024.02.22 ஆம் திகதிய அரசா கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை இல 3/2024 கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி 2024 ஆம் ஆண்டிற்காக செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், இவ் விடயமானது 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இல 09 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது	தொடர்புடைய எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் உடன் இணங்குவதனை கணக்காளர் உறுதிசெய்ய வேண்டும்.
(இ)	காணி சுவீகரிப்பிற்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள் மீதான செலவுகள் மற்றும் இழப்பீட்டு கொடுப்பனவுகள் மீதான தாமத வட்டி முறையே ரூபா 228.19 மில்லியன் தொகை மற்றும் ரூபா 102.87 மில்லியன் தொகை என்பன நிதிக்கூற்றுக்களில் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	331.06	இத் தொகைகள் நிதிக் கூற்றுக்களில் உரிய பிரதேச செயலாளர் அலுவலகங்களின் கீழ் மேலும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.	தொடர்புடைய எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் உடன் இணங்குவதனை கணக்காளர் உறுதிசெய்ய வேண்டும்.

(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் பந்தி 100 இன் பிரகாரம், தீர்ப்பவுகளில் ஏதாவது வெளிப்பாய்ச்சலிற்கான சாத்தியகூறு இருந்தால் தவிர நிகழத்தக்க பொறுப்பின் தன்மையின் ஓர் சுருக்கமான விபரமானது அறிக்கையிடல் திகதியில் நிகழத்தக்க பொறுப்புக்களின் ஒவ்வொரு வகுப்புக்களையும் ஓர் நிறுவனம் வெளிப்படுத்த வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டின் போது மீதமாக உள்ள 1054 துண்டுகளின் மீதான செலுத்தப்படவேண்டிய இழப்பீடு தொடர்பான எவ்வித வெளிப்படுத்தல்களையும் செயற்திட்டமானது செய்திருக்கவில்லை.	-	இப்பொறுப்புக்களின் தீர்ப்பனவுகளை வெளிப்பாய்ச்சலிற்கான சாத்தியம் தொலைவாக கருதப்பட்டதனால் இது நிதிக்கூற்றுக்களில் ஓர் நிகழத்தக்க பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தொடர்புடைய எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் உடன் இணங்குவதனை கணக்காளர் உறுதிசெய்ய வேண்டும்.

2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள்	இணக்கமின்மை / கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	2019 மார்ச் 15 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் உப பிரிவு 9.3	செயற்திட்டத்தின் வழிநடாத்தல் குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும். இருப்பினும், இரண்டு கூட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்தது.	செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டங்களானது முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்படவில்லை.	சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படல் வேண்டும்.
(ஆ)	2019 சனவரி 12 ஆம் திகதிய டீஎம்ஏ/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ	உள்ளககணக்காய்வு மீளாய்வுக்குழு நிறுவப்பட வேண்டியதுடன் குறைந்தது 04 கூட்டங்கள் வருடாந்தம்	உள்ளக கணக்காய்வாளர் இல்லாததன் காரணமாக உள்ளக	சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படல் வேண்டும்.

கணக்காய்வு சுற்றறிக்கை.	நடாத்தப்படல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டின் போது PMU வினால் எவ்வித உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழுகூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு மீளாய்வுக் குழு கூட்டம் நடாத்தப்படவில்லை.

பௌதீக முன்னேற்றம்

3.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

கூறு	செயற்பாடு	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு		கணக்காய்வு விடயம்	தாமதங்களிற்கான காரணம்
		எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் துண்டுகள்	அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் துண்டுகள்		
காணி சுவீகரிப்பு	உரித்தினை RDA விற்கு மாற்றல்.	1411	40	காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 38(அ) வின் கீழ் செயற்திட்டத்தினால் 1,411 காணித்துண்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும், 357 துண்டுகளிற்கான மொத்த இழப்பீடு ரூபா 228.13 மில்லியன் தொகையும் 296 துண்டுகளிற்கான தாமத வட்டி ரூபா 97.03 மில்லியன் தொகையுமே 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதி வரை சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் மீதமாக உள்ள துண்டுகளிற்கான	மந்தகதியான மேற்பார்வையின் காரணமாக காணி சுவீகரிப்பு செயன்முறையில் தாமதம்.

			மதிப்பீட்டு செயன்முறையினை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி அளவில் 40 காணித்துண்டுகளிற்காக மாத்திரமே காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் பிரகாரம் உரிமையினை செயற்திட்டத்தினால் பெறக்கூடியதாக இருந்தது.

முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	உடன்பட்டனர். பிரிவு 44 பதிவானது பிரதேச செயலக அலுவலகத்தினால் செய்யப்படுகின்றது. பல்வேறு நினைவூட்டல்கள் வழங்கப்பட்டிருந்தும், பதிவின் செயலாற்றல் ஆனது குறைந்த மட்டத்திலே உள்ளது.
கணக்காய்வாளர் பரிந்துரைகள்	காணி சுவீகரிப்பு செயன்முறையானது காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்படுவதனை செயற்திட்டமானது உறுதி செய்ய வேண்டும்.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ) ஒருகொடவத்த – அம்பத்தல வீதியிலுள்ள பாலம் இல. 6/1 இன் அகலப்படுத்தல் மற்றும் ஒருகொடவத்த – அம்பத்தல வீதியிலுள்ள பால இல 4/3 இன் அகலப்படுத்தல் என்பன 2022 மார்ச் 08 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்திட்டத்தினால் கையேற்கப்பட்டு RDA (தொழில் தருனர்) இற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.	உடன்பட்டனர். பாலத்தினை கையளிப்பதற்கு உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன.	செயற்திட்ட சொத்துக்களானது வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ) ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உபபிரிவு 14.7 இன் பிரகாரம், பொறியியலாளர்	கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட படி,	தாமதங்கள் தொடர்பில் ஓர் முறையான விசாரணை

	ஆவணங்களை பெற்றுக்கொண்டதன் பின்னரான 56 நாட்களிற்குள் ஒவ்வொரு IPC இலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தொகையினை தொழில் வழங்குனர் செலுத்த வேண்டும், மேலும் கொடுப்பனவுகளில் ஏதாவது தாமதம் காணப்பட்டால் ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.8 இன் படி தாமத காலப்பகுதியின் போதான செலுத்தப்படாத தொகை மீது மாதாந்தம் திரட்டிய நிதிக்கட்டணங்களை பெற்றுக்கொள்ள ஒப்பந்ததாரர் தகுதியுடையவராவார். இருப்பினும், ஒப்பந்ததாரரிற்கான கொடுப்பவுகளில் 70 தொடக்கம் 570 நாட்கள் என்ற வீச்சிலான தாமதத்துடன் பொதி RDA/MFAP/ICB/SFD-2/02A மற்றும் பொதி RDA/MFAP/ICB/SFD-2/03 மீது ஒப்பந்ததாரரிற்கு செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டின் போது (2024.03.11 மற்றும் 2024.06.29) கூட்டுமொத்தம் ரூபா 67.78 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் இருந்து மேற்கூறப்பட்ட விடயத்தின் மீது ஓர் முறையான விசாரணையினை நடாத்துவதற்கு கணக்காய்வாளர் தலமை அதிபதியினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தும், முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்தாமல் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	வட்டியின் ஓர் குறிப்பிடத்தக்க பகுதியானது கடன் வழங்குனரின் பண வழங்களில் தாமதங்கள் காரணமாக ஏற்பட்டிருந்தது. பொதி RDA/MFAP/ICB/SFD-2/02A இற்காக, துணை உடன்படிக்கையினை அனுமதிப்பதில் தாமதங்கள் மற்றும் கடன் வழங்குனரின் கொடுப்பனவுகளில் தாமதங்கள் போன்ற கணக்கின் மீது ரூபா 38,665,957.46 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், மேலதிக விசாரணைகளை செய்வதற்கு ஓர் குழு நியமிக்கப்படும்.	நடாத்தப்பட வேண்டியதுடன் ஏற்பட்ட நட்டங்கள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் பாகம் XLV111 இன் பிரிவு 29 இன் பிரகாரம் அரசாங்கத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 10.1 இன் பிரகாரம், ஒப்பந்தத்தின் படி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் போது தொழில் வழங்குனரினால் வேலைகள் கையேற்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், கடுகஸ்தோட்ட தொடக்கம் அலவத்துகொட வரையான (4+600கி.மீ -15+570 கி.மீ) A009 கண்டி – யாழ்ப்பாணம் வீதிப்பிரிவு, தமபலகாமம் தொடக்கம் சுரங்கல் சந்தி வரையான B541 தம்பலகாமம் - கிண்ணியா	கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இம் மூன்று வீதிகளும் 2014 பிற்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் RDA வினுடய உரிய நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகமானது சரியான முறையில்	ஓர் வினைத்திறனான ஆவணப்படுத்தல் முறை பின்பற்றப்படல் வேண்டும்.

	வீதிப்பிரிவு மற்றும் பெஹெலியகொட தொடக்கம் கிரபத்கொட (5+860 கி.மீ – 13+100 கி.மீ) வரையான A001 கொழும்பு – கண்டி வீதிப்பிரிவு போன்றனவற்றுடன் தொடர்புபட்ட கையேற்பிற்கான ஆவண உறுதிப்படுத்தலானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கையளிக்கப்பட்டது, மேலும் தொடர்புடைய பராமரிப்பு வேலைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் செய்யப்படுகின்றது.	

3.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	2013 ஜூன் இல் இருந்து ஆரம்பிக்கப்படும் பத்து வருடங்களிற்கு மேலான செயற்திட்ட காலப்பகுதிக்கான மொத்த ஒதுக்கீடு ரூபா 10,628.00 மில்லியனிற்கு சமமான SAR 225.00 மில்லியனில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனிலிருந்து ரூபா 8,339.39 மில்லியனிற்கு சமமான SAR 219.68 மில்லியனினையும் உள்நாட்டு நிதிகளிலிருந்து 748.70 மில்லியனினையும் மாத்திரமே செற்திட்டமானது பயன்படுத்தியிருந்தது. செயற்திட்டத்தின் ஆரம்ப முடிவுறுத்தல் திகதியானது 2016 திசெம்பர் 31 ஆக இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட SAR 5.32 மில்லியன் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	அதே வீதியில் பால இல. 4/1 இனை மீள்நிர்மானம் செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. பால இல. 4/1 இன் மீள்நிர்மானத்திற்கான விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. இருப்பினும், ஒப்பந்த கையளிப்பானது கையளிப்பு தீர்மானத்திற்கு எதிரான ஓர் மேன்முறையீடு காரணமாக தாமதமடைந்திருந்தது. அதே நேரம், வேலைகளின் விடயப்பரப்பானது ஏற்கனவே உள்ள NWSDB இன் குழாய்களின் அகற்றல் காரணமாக மாற்றியமைக்கப்பட்டிருந்தது.	செயற்திட்டமானது முறையான செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டினை தயாரிக்க வேண்டியதுடன் அதன் அடிப்படையில் பொறுப்புக்களும் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் ரூபா 241.79 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில், செயற்திட்டமானது மீளாய்வாண்டின் போது ரூபா 189.06 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது. எனவே 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 52.73 மில்லியன் அல்லது 21.8 சதவீதம் ஆன சேமிப்பு காணப்பட்டிருந்தது. எனவே பாதீட்டு ஒதுக்கீடானது PMU வினால் ஓர்	வழங்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா 241.79 மில்லியனின் பிரகாரம், 189.06 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. பெறுகை நடைமுறையில் தாமதம் காரணமாக ஒருகொடவத்த – அம்பத்தல வீதியிலுள்ள பால இல 4/1 ஆரம்பிக்கப்பட்டிராததன்	செயற்திட்டமானது முறையான செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டினை தயாரிக்க வேண்டியதுடன் அதன் அடிப்படையில் பொறுப்புக்களும் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.	காரணமாக ஓர் சேமிப்பு காணப்படுகிறது.	

3.4 காணி சுவீகரிப்பு செயன்முறை

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
செயற்திட்டமானது காணி சுவீகரிப்பு செயன்முறை தொடர்பான ஓர் தரவுத்தளத்தினை பராமரித்திருக்கவில்லை, மேலும் அதனால் விஸ்தரிக்கப்பட்ட காணிகள், இழப்பீடு செலுத்த வேண்டிய காணித்துண்டுகள் மற்றும் இழப்பீட்டு தொகை, கொள்வனவு செய்யப்பட வேண்டிய காணித்துண்டுகள், தாமத வட்டி செலுத்தப்பட வேண்டிய காணித்துண்டுகள் மற்றும் தாமத வட்டித்தொகை என்பனவற்றினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.	செயற்திட்டமானது ஆண்டுக்காக கோரப்பட்ட தகவல்கள் மற்றும் ஒட்டுமொத்த தொகைகள் என்பனவற்றினை உள்ளடக்கிய சுருக்கமான தரவு அட்டவணையினை கணக்காய்வு பரீட்சிப்பு நோக்கத்திற்காக வழங்கியுள்ளது.	காணி சுவீகரிப்புக்களின் அனைத்து விபரங்கள் தொடர்பான ஓர் முறையான தரவுத்தளத்தினை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38 (1)(இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செய்யப்பட்ட மீளாய்வில் எழுத்து மூலமான அறிவுறுத்தல்களும் வழங்கப்படல் வேண்டும்.

3.5 ஆளணி முகாமைத்துவம்

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2024 மார்ச் 16 ஆம் திகதிய கடித இல. DMS/7777/MFAP இன் பிரகாரம், 2024 திசெம்பர் 31 வரை நானாவித வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக அனுமதிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை 26 ஆகும் இருப்பினும், அனுமதிக்கப்பட்ட ஆளணியினருக்கு மேலதிகமாக ஓர் சிரேஸ்ட பொறியியலாளர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியில்லாமல் ஓர் நிர்வாக உத்தியோகத்தர், இரண்டு	2025.03.06 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடித இல. DMS/7777/MFAP இனால் 06 மேலதிக பதவியினர் அனுமதிக்கப்பட்டிருந்தது.	மேலதிக ஆளணியினரை ஆட்சேர்க்க முன்னர் அனுமதி பெறப்படல் வேண்டும்.

எழுத்தாளர்கள் / தட்டெழுத்தாளர்கள், ஓர் அலுவலக உதவியாளர் மற்றும் ஓர் அலுவலக தொழிலாளி போன்றோர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.